பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 21 செவ்வாய்க்கிழமை 03.05.2022 கதிர் 72

## நிதி அமைச்சர் நாளை சபையில் விசேட உரை



நிதி அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் நாளை விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

நாடாளுமன்றம் நாளை முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

☞2

# பஸிலின் அதிக சொத்துக்கள் நடேசனின் பெயரில் பதுக்கல்




## தகவலை வெளியிட்டார் அநுர

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் பெரும்பாலான சொத்துகள் திருக்குமரன் நடேசனின் பெயரில்தான் பதுக்கப்பட்டுள்ளன. மல்வானை காணி விவகாரத்தில்கூட பாரிய ஊழல்கள் உள்ளன.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

'நாட்டைநாசமாக்கியதிருட்டுக்கும்பலைஒட்டுமொத்தமாகஅம்பலப்படுத்தல்' எனும் தொனிப்பொருளின்கீழ் 'ஊழல் எதிர்ப்புக் குரல்' எனும் அமைப்பால் கொழும்பு மன்றத்தில் இன்று விசேட ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

☞2

## ஆறுமுகன் தொண்டமானின் ஆவணங்களும் எம் கைவசம்

### அம்பலப்படுத்தினார் அநுர

முன்னாள் அமைச்சர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் தொடர்பான தகவல்களும் தம்மிடம் இருக்கின்றன என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

'நாட்டை நாசமாக்கிய திருட்டுக் கும்பலை ஒட்டுமொத்தமாக அம்பலப்படுத்தல்' எனும் தொனிப்பொருளின்கீழ் 'ஊழல் எதிர்ப்புக் குரல்' எனும் அமைப்பால் இன்று விசேட

☞2

## யாழில் பெருநாள் தொழுகை



முஸ்லிம்களின் நோன்புப்பெருநாள் இன்றாகும். அந்தவகையில் யாழ்ப்பாணம் முஸ்லிம்களின் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகை யாழ். மார்யம் ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இன்று காலை 6.45 மணியளவில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி ஜின்னா மைதானத்தில் இடம்பெற்றது.

'நபி வழியில்

☞2

## சிங்கங்கள் இருக்கும் காட்டில் கர்ஜிக்கும் சத்தம் கேட்குமாம்

### ஹரின் மழுப்பிய பதில்



சிங்கங்கள் இருக்கும் காட்டில், கர்ஜிக்கும் சத்தம் பலமாகவே கேட்கும். அதனைச் சண்டையாகக் கருதிவிட முடியாது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ

☞2

## ஹரினுக்கு எதிராக முறைப்பாடு

### பொன்சேகா தெரிவிப்பு



ஹரின் பெர்னான்டோவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் கட்சியின் தலைமையிடம் முறையிடப்படும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் சரத் பொன்சேகா எம்.பி. தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது சரத் பொன்சேகா எம்.பிக்கும்

☞2

## கொடிகாமத்தில் கோர விபத்து; இளைஞர் ஒருவர் பரிதாபப் பலி!



யாழ்., தென்மராட்சி, கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இன்று அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில் கொடிகாமம் - கச்சாய் வீதியைச் சேர்ந்த யோகேஸ்வரன் நிலாந்தன் (வயது 31) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற கப் ரக வாகனமும், யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விபத்து தொடர்பில்

☞2

## இந்தியா செல்ல முற்பட்ட வவுனியா வாசிகள் கைது

(ந.லோகதயாளன்)

இந்தியாவுக்குத் தஞ்சம் கோரி செல்ல முற்பட்ட நால்வர் இன்று அதிகாலை ஒரு மணியளவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



வேலணை, வெண்புரிநகர் பகுதியில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள் ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச்

☞2

## புதிய அரசமைப்பு குறித்து ஆராய அமைச்சரவை உப குழு நியமனம்

புதிய அரசமைப்பு குறித்து ஆராய அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான நாலக கொடஹேவா இன்று தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு வரைபைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் த சில்வா தலைமையில் சட்டத்துறை நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு 09.09.2020 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, இக்குழுவின் ஆரம்ப அறிக்கை 25.04.2022 அன்று ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

☞2

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் 'மே18' முள்ளிவாய்க்கால் வரவேண்டும்

### ஐங்கரநேசன் அழைப்பு



போரில் கொல்லப்பட்ட மக்களுக்கான நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு அரசாங்கம் இன்றுவரை தடைவிதித்து வரும் நிலையில் மே 18 அன்று எங்களுடன் சேர்ந்து அஞ்சலிக்க வாருங்கள் என்றுதான் அழைக்கிறோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து ராஜபக்ஷாக்களை வெளியேறக்கோரி 'கோட்டா கோ கேம்' என்று காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களில்

☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## புதிய அரசமைப்பு குறித்து ஆராய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்களை ஆராய்ந்து உகந்த பரிந்துரைகளை அமைச்சரவைக்கு முன்வைப்பதற்காக கீழ்க்காணும் அமைச்சர்களுடன் கூடிய உபகுழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

1. பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் (வெளிவிவகார அமைச்சர்) - (தலைவர்)

2. தினேஷ் குணவர்த்தன (அரச பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர்)

3. டக்ளஸ் தேவானந்தா (கடற்றொழில் அமைச்சர்)

4. வைத்தியர் ரமேஷ் பத்திரன (கல்வி மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்)

5. அலி சப்றி (நிதி மற்றும் நீதி அமைச்சர்)

## காலிமுகத்திடல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழில் தேசிய கீதம் பாடுவதாலோ, தமிழ் இசைக்கருவியான பறைகளை முழங்குவதாலோ போராட்டக்காரர்கள் தமிழ்மக்களின் மனங்களை வெல்ல முடியாது. பண்டாரநாயக்காவின் சிலையில் கண்களைக் கறுப்புத் துணியினால் கட்டுவதால் புரையோடிப் போயுள்ள பேரினவாதம் அற்றுப்போய் விடும்என்றுதமிழ்மக்கள்நம்பத்தயாராக இல்லை. இந்த மாற்றங்கள் இதயசுத்தியானது என்பதைத் தமிழ்மக்கள் நம்புவதற்கு நீங்கள் இன்னும் அதிக தூரம் பயணிக்க வேண்டும். மே18 அன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு வாருங்கள். மாவீரர்களுக்கு விளக்கேற்ற நாம் கோரவில்லை. போரில் கொல்லப் பட்ட மக்களுக்கான நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு அரசாங்கம் இன்றுவரை தடைவிதித்து வரும் நிலையில் மே18 அன்று எங்களுடன் சேர்ந்து அஞ்சலி செலுத்த வாருங்கள் என்று தான் அழைக்கிறோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் காலி முகத்திடல் போராட்டக்காரர்களுக்கு அழைப்பு விடுத் துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மேதினப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சிங்கள மக்களைப் போன்றே தமிழ் மக்களும் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கித்தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், அரசாங்கத்துக்கு எதிராகத் தென்னிலங்கையில் இடம் பெற்றுவரும் போராட்டங்களில் இன்றுவரையில் தமிழ்மக்கள் உணர்வுபூர்வமாக ஒன்றிக்கவில்லை. நாடுதழுவிய போராட்டங்களுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டு வருகின்றபோதும் தமிழ்மக்கள் பார்வையாளர்களாக மாத்திரமே இருந்து வருகிறார்கள். இதற்கான காரணங்களைப் போராட்டக்காரர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

போராட்டக்காரர்களின் இலக்கு ராஜபக்ஷாக்களை வீட்டுக்கு அனுப்புவதாக மாத்திரமே இருக்கிறது. இதற்கான காரணங்களாக ராஜபக்ஷாக்களின் குடும்ப ஆட்சி, ஊழல் ஆட்சி, சர்வாதிகார ஆட்சி என்பனவற்றையே முன்வைக்கிறார்கள். ஆனால், இவை எல்லாவற்றையும் விட இன்று ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவுகளுக்குப் பின்னால் சிங்கள பௌத்தப் பேரினவாதமே உள்ளது. இதனைப்பற்றிப் போராட்டக்காரர்கள் இன்றுவரை பேச முன்வரவில்லை.

ராஜபக்ஷாக்களை வீட்டுக்கு அனுப்புவதால் தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைக்கப்போவதில்லை. தீர்வைப் போராட்டக்காரர்களிடம் இருந்து நாம் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால், மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனவாத ஒடுக்குமுறைகளும் அதனால் மூண்டபோருமே இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மூல காரணம் என்ற உண்மையை வெளிப்படையாக நீங்கள் உரத்த குரலில் பேச வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்போதுதான் உங்களோடு சேர்ந்து போராடத் தமிழ்மக்கள் முன் வருவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

## கொடிகாமத்தில் கோர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்தியா செல்ல .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த நால்வர் நேற்று யாழ்ப்பாணம் வந்து, வேலணை கடற்பகுதி ஊடாக இந்திய செல்ல முற்பட்டவேளை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நால்வரும் சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை இந்தியாவுக்கு அனுப்பவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட நபர்கள் தொடர்பான விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஹரினுக்கு எதிராக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹரின் பெர்னாண்டோ எம்.பிக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே பொன்சேகா எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மே தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பு ஹரின் பெர்னாண்டோவிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், சில தவறுகள் இடம்பெற்றன. பேச்சாளர்களின் பட்டியலில் எனது பெயர் இருக்கவில்லை. ஒரு சிலர் திட்டமிட்ட அடிப்படையில் என்னை ஓரங்கட்டியுள்ளனர்.

இதனால், மேலும் சில எம்.பிக்கள் அதிருப்தியில் இருந்தனர். இது தொடர்பில் கட்சித் தலைமையிடம் முறையிடப்படும். தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - என்றார்

## சிங்கங்கள் இருக்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது சரத் பொன்சேகா எம்.பிக்கும், ஹரின் பெர்னாண்டோ எம்.பிக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. இந்த விவகாரம் குறித்து நேற்றைய கட்சிக் கூட்டத்திலும் ஆராயப்பட்டுள்ளது.

அதன்பின்னர் மேற்படி முறுகல் நிலை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே ஹரின் இவ்வாறு குறிப்பிட்டார்.

என்ன, சண்டையா? நானும், அவரும் சிங்கங்கள். சிங்கங்கள் இருக்கும் காட்டில் சண்டையும் இருக்கவே செய்யும். இது புரியாமல் நரிகள் ஊளையிடுவதால் நாம் என்ன செய்வது? எனக் கூறிவிட்டு பறந்தார் ஹரின் பெர்ணான்டோ எம்.பி.

## சிங்கங்கள் இருக்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்தொழுகை’எனும்தொனிப்பொருளில் பெருநாள் தொழுகை நடைபெற்றது.

நோன்புப் பெருநாள் தொழுகை மற்றும் பெருநாள் குத்பா பிரசங்கம் என்பன மௌலவி எம்.ஏ. பைசரால் (மதனி) நிகழ்த்தப்பட்டது.

இன்றைய பெருநாள் திடல் தொழுகையில் யாழ். வாழ் முஸ்லிம்கள், தாய்மார்கள், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆறுமுகன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பில் முன்னாள், இந்நாள் அமைச்சர்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் ஊழல், மோசடிகள் குறித்த தகவல்களை அநுரகுமார திஸாநாயக்க அம்பலப்படுத்தினார்.

இதன்போதே கால்நடை வள அமைச்சுப் பதவியை அமரர் ஆறுமுகன் தொண்டமான் வகித்தபோது, வாகனங்களுக்கு எரிபொருள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான தகவல்கள் இருக்கின்றன என்று அநுரகுமார குறிப்பிட்டார்.

## பஸிலின் அதிக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது முன்னாள், இந்நாள் அமைச்சர்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் ஊழல், மோசடிகள் குறித்த தகவல்களை அநுரகுமார திஸாநாயக்க அம்பலப்படுத்தினார். பெருமளவான ஆவணங்களும் ஊடக சந்திப்பின்போது காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

எயா பஸ்களை வாங்குமாறு, பிரான்ஸின் எயா பஸ் நிறுவனம் அழுத்தம் பிரயோகித்துள்ளது. இது குறித்து சர்வதேச விசாரணை இடம்பெற்றது. இது தொடர்பில் பிரிட்டன் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுக்கப்பட்டது.

இந்த எயா பஸ்களை கொள்வனவு செய்வதற்கு முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் வீட்டில் கூட்டம் நடந்துள்ளது. சமல் ராஜபக்ஷவின் மகனும் இதனுடன் தொடர்புபட்டுள்ளார். எயா லங்கா நிறுவனத்தில் அவர் பதவி வகித்துள்ளார் என்றும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

2015 முதல் 2019 வரையான காலத்தில் தேசிய மத்திய கலாசார நிதியத்தின் நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

நிதியம் மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களின் எந்த அனுமதியும் இன்றி நிதியத்தின் பணம் செலவிடப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாஸவின் நேரடியான உத்தரவின் கீழேயே இந்தச் செலவுகளைச் செய்தாகச் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது.

செலவு செய்து முடிந்த பின்னர் 2019.11.15ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவசர பணிப்பாளர் குழு நியமிக்கப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க, ஜோன் அமரதுங்க, மங்கள சமரவீர, சஜித் பிரேமதாஸ, அகில விராஜ் , மனோ கணேசன், பேர்னாட் பிரியந்த ஆகியோர் பணிப்பாளர்கள் குழுவில் இருந்தனர் என்ற தகவலையும் அநுரகுமார வெளியிட்டார்.

யோசித ராஜபக்ஷவின் காணிகள் குறித்த தகவல்களும் அம்பலப்படுத்தப்பட்டன.

## நிதி அமைச்சர் நாளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் கூடவுள்ளது.

அமைச்சுகளுக்கான அறிவிப்பு வேளையின் போது, சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற பேச்சு, அதன் மூலம் ஏற்பட்டுள்ள சாதக பெறுபேறு மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக நிதி அமைச்சர் சபைக்குத் தெளிவுபடுத்தவுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாடாளுமன்றக் களத்தில்...

**நாளை கூடும் நாடாளுமன்றத்தில் இவ்வார அமர்வுகள் மூன்று நாளைக்கு – வரும் வெள்ளிக்கிழமை வரை – நீடிக்கும். தீர்க்கமான தீர்மானங்கள் எவையும் இந்த மூன்று நாள்களில் நாடாளுமன்றத்தில் மேற்கொள் ளப்படமாட்டா என்றாலும் இவ்வாரம் இலங்கை அரசியலில் முக்கிய திருப்பங்களுக்கான களமாக நாடாளுமன்றம் அமையும் வாய்ப்புகள் இருக்கின்றன என்றே தெரிகின்றது.**

**நாடாளுமன்றம் நாளை கூடியதும் முதல் விடயமாக பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெற இருக்கின்றது.**

**நாடாளுமன்ற சம்பிரதாயங்களின்படி நாடாளுமன்றம் கூடும் போது சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர் ஆகிய பதவிகளில் ஏதேனும் ஒன்றில் வெற்றிடம் இருக்குமாயின் அந்த வெற்றிடத்தை நிரப்புவதுதான் நாடாளுமன்றத்தின் முதல் பணியாக இருக்க வேண்டும் என்பது எழுதாத ஓர் ஒழுங்குமுறை.**

**பிரதி சபாநாயகராக இருந்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய கடந்த 30ஆம் திகதியிட்ட தனது பதவி விலகல் கடிதத்தை ஒப்படைத்து விட்டார். நாளை நாடாளுமன்றம் கூடும் போது பிரதி சபாநாயகர் பதவி வெற்றிடமாகியிருக்கும். அதனால் அதனைத் தமது நிகழ்ச்சி நிரலில் முதலாவது விடயமாக சேர்த்துக்கொள்ள வேண்டியமை சபாநாயகரின் கடமையாகும்.**

**ஆக, நாளை நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் தேர்வு முதல் விடயமாக இடம்பெறப் போகின்றது.**

**அரசுத் தரப்பில் டிலான் பெரேராவும், எதிர்க்கட்சிகள் தரப்பில் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும் களத்தில் இறங்குகின்றனர் எனத் தெரிகின்றது. இரண்டு தரப்பிலும் வெற்றி யாருக்கு என்பது தெரியாத நிலையில்தான் தேர்வுக் களம் சூடாக உள்ளது. ஆளும் கட்சியில் இப்போதைக்கு எத்தனை பேர் இருக்கின்றனர் என்பதே தெரியாத விடயமாக இருக்கும்போது டிலானின் வெற்றி வாய்ப்பு சந்தேகத்திற்குரியதாக உள்ளது.**

**ஆனால் எதிர்க்கட்சி தரப்பு அதிக எதிர்பார்ப்புடன் இருக்கின்றது. வெற்றி நமதே என்று அது எண்ணுகின்றது. அதற்குக் காரணம் உண்டு. இந்தத் தெரிவு பெரும்பாலும் இரகசிய வாக்கெடுப்பு மூலமே நடத்தப்படுவது வழமை. அப்படி நடத்தப்பட்டால் தங்கள் வேட்பாளர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் வெற்றி வாய்ப்பு மிகப் பிரகாசமாக இருக்கும் என எதிர்க்கட்சிகள் தரப்பு நம்புகின்றது. ஆளும் தரப்புக்குள் நீடிக்கும் உள்வீட்டுச் சண்டை காரணமாக பிரதி சபாநாயகர் தெரிவில் ஆளும் தரப்பு மண்கவ்வ அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன.**

**இதேசமயம், நாடாளுமன்றத்தின் இவ்வாரத்திய அமர்வுக்கு நடுவில்தான் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் உத்தியோகபூர்வமாக எதிர்க்கட்சிகள் தரப்பினால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட உள்ளன.**

**இவ்வாரத்தில் அவை கையளிக்கப்பட்டாலும் உடனடியாக அவை விவாதத்துக்கு எடுக்கப்பட மாட்டா. அதற்குக் காலம் பிடிக்கலாம் என்று தெரிகின்றது. பெரும்பாலும் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது இந்தப் பிரேரணைகள் விவாதத்திற்கு வரலாம். அப்போதுதான் நாட்டில் சீரழிந்து போயிருக்கும் அரசியல் நிலைவரங்களை அம்பலப்படுத்தி மாற்றுவதற்கான வாய்ப்பு சமூகத்துக்குக் கிடைக்கும்.**

**ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும்போதுதான் இவ்வளவு குழப்பங்களுக்கும் காரணமான ஜனாதிபதியை அரசியல் ரீதியாகப் பேணிப் பாதுகாப்பவர்கள் யார் என்ற உண்மை மக்களுக்குத் தெரியவரும். அதாவது அரசியல்வாதிகள் பலரின் முகத்திரை அப்போது கிழியும்.**

# அரசமைப்பு எங்களுக்கு அவசியமில்லை அதனை நாங்கள் தீயிட்டு கொளுத்துவோம்!

## பாகொட ஜன்தவங் தேரர் ஆக்ரேஷம்



நாட்டு மக்கள் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளபோது அரசியல்வாதிகள் அரசமைப்பின் ஊடாக அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முயற்சிப்பார்களாயின் அவர்களும் பிரயோசனமற்றவர்களாகி , அரசமைப்பும் பிரயோசனமற்றதாகிவிடும்.

எனவே இதே நிலைமை தொடருமாயின் நாட்டில் ஒவ்வொரு சந்தியிலும் அரசமைப்பை தீயிட்டு கொளுத்துவோம் என பாகொட ஜன்தவங்தேரர்தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் அரசியல் கட்சி தலைவர்களுக்கும், மகாசங்கத்தினருக்குமிடையில் கொழும்பில் உள்ள இலங்கை மன்ற கல்லூரியில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தேசிய கீதம் இசைக்கப்படும் போது மரியாதை செலுத்தி எழுந்து நிற்கிறோம். மயக்கமடைந்து விழுந்த பிறகு மரியாதை செலுத்த முடியாத நிலைமை ஏற்படும். நாடு பல்துறைகளில் வீழ்ச்சியடைந்துள்ளது.

மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இல்லாமல் பொது மக்கள் உயிரிழக்கும் நிலைமை ஏற்படும்போது அரசமைப்பின் அடிப்படையில் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டு மக்கள் இறந்தாலும் பரவாயில்லை என மக்கள் பிரதிநிதிகள் கருது–வார்களாயின், மக்கள் பிரதிதிகளும் அவசியமில்லை, அரசமைப்பும் அவசியமில்லை.

அரசியல்வாதிகள் அரசமைப்பில் இருந்துகொண்டு தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிப்பார்களாயின் அரசமைப்பை நாட்டில் ஒவ்வொரு சந்தியிலும் தீயிட்டு கொளுத்துவோம். மக்களின் நலனுக்காகவே அனைத்தும் உள்ளன.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் வழங்கியுள்ள ஆலோசனைகளுக்கு பிரதமர் உட்பட முழு அரசாங்கமும் மதிப்பளிக்க வேண்டும். அத்துடன் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல கட்சிளும் இடைக்கால அரசாங்கம் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும்.

பொதுத்தேர்தல் ஊடாகவே பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என ஒருசில அரசியல்கட்சிகள் முன்வைத்துள்ள யோசனை ஏற்றுக் கொள்ளக் கூடியது. பொதுத் தேர்தலை நடத்தும் சூழல் நாட்டில் தற்போது கிடையாது. இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தும் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். –என்றார்.

நாங்கள் கட்சிகளை வெற்றி கொள்வதற்காக உழைக்கவில்லை. நாட்டையும் தேசத்தையும் மதத்தையும் வென்று சிறந்த சமுதாயத்தை உருவாக்கவே முயற்சிக்கின்றோம். இப்போது என்ன நடந்தது என்ற கேள்விகளுக்கு பதிலளிக்க முயற்சித்தாலும், நாங்கள் பிரச்சினைகளில் சிக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகக் கோரி நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை ஏந்க தயாராகுகின்றனர் மகாநாயக்க தேரர்கள்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் ஆரூடம்



சமகால அரசாங்கத்தை பதவி விலகுமாறு கூறுவது இலகுவானது. ஆனால் நாட்டின் பொறுப்பை ஏற்க இதுவரை எவரும் முன்வரவில்லை என கொழும்பு பல்கலைக்கழக வேந்தர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தையும் பிரதமரையும் நீக்கி இடைக்கால அரசாங்கத்தை முன்னெடுப்பதற்கான பிரேரணை மகாநாயக்க தேரர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முருத்தெட்டுவே ஆனந்த தேரரிடம் வினவியபோது, அவர்கள் பதவி விலக வேண்டுமாயின் அரசாங்கத்திற்கு பொறுப்பேற்க யாராவது முன்வர வேண்டும் என சுட்டிக்காட்டினார். அப்படி இல்லை என்றால் அரசாங்கத்தின் பொறுப்பை மகாநாயக்க தேரர்கள் பொறுப்பேற்க வேண்டிய நிலை வரும்.

சமூகம் எழுப்பும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாத நிலையில் தான் இருக்கிறேன் எனவும், இந்த நிலைமை தொடர்பாக ஆரம்பம் முதலே அரசாங்கத்தை எச்சரித்தேன் எனவும் ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தாம் கூறுகின்றமையைக் காது கொடுத்து கேட்காமையால் ஏற்பட்டதன் விளைவு இது என ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு வழங்கப்பட்டுள்ளது புதிய பதவி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன கட்சியின் மாத்தறை தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அவர் இன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

தென் மாகாண முன்னாள் ஆளுநர் ஹேமல் குணசேகர முன்னிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



# மரியுபோல் இரும்பு ஆலை பதுங்கு குழியில் அழுகிய நிலையில் குழந்தைகள் சடலம்

## நூற்றுக்கும் மேற்பட்டோரை மீட்கும் பணி தொடங்கியது





மரியுபோலின் இரும்பு ஆலை பதுங்கு குழியில் நூற்றுக்கணக்கான குழந்தைகளின் சடலங்கள், அழுகிய நிலையில் சடலங்கள் இருக்கின்றன என உக்ரைன் ராணு வத்தின் 12வது படைப்பிரிவு தலைவர் தெரிவித்துள்ளார். அங்கு சிக்கியிருக்கும் நூற்றுக்கணக்கான மக்களை மீட்கும் பணி தொடங்கி உள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான போர் 2 மாதங்களுக்கும் மேலாக நீடிக்கிறது. தற்போது, உக்ரைனின் கிழக்கு, தெற்குப் பகுதிகளில் ரஷ்ய ராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. துறைமுக நகரமான மரியுபோலை சமீபத்தில் ரஷ்ய ராணுவம் கைப்பற்றிய நிலையில், அங்குள்ள மிகப்பெரிய இரும்பு ஆலை அமைந்துள்ள பகுதி மட் டும் உக்ரைன் படையினர் வசம் உள்ளது. அங்கு 2,000க்கும் மேற்பட்ட மக்கள் பதுங்கி உள்ளனர். மரியுபோல் நகரம் போரில் முற்றிலும் உருக்குலைந்த நிலையில், இரும்பு ஆலையில் சிக்கியவர்களை மீட்கும் பணிநேற்றுதொடங்கியது. ரஷ்ய படை யின் குண்டு வீச்சில் தரை மட்டமாகி கிடக்கும் இரும்பு ஆலையில் பதுங்கு குழிகளில் இருந்து மக்கள் சிலர் நேற்று மீட்கப்பட்டனர். 46 பேரை ரஷ்ய ராணுவம் வெளியேற்றி உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

உக்ரைன் ராணுவத்தின் 12வதுபடைப்பிரிவு தலைவர் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், "ஆக்கிரமிப்பில் உள்ள இரும்பு ஆலைக்குள் நூற்றுக்கணக்கான குழந்தைகள், மக்கள் சிக்கி தவிக்கின் றனர். 500க்கும் மேற்பட்ட உக்ரைன் படைவீரர்கள், அழுகிய நிலையில் ஏராளமான சடலங்கள் கிடக்கின் றன. பதுங்கு குழியில் உள்ளவர்களை வெளியேற்ற மேலும் சில நாள்கள் கூடுதலாக தேவைப்படும், "என தெரிவித்தார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் செய்தி தொடர்பாளர் சாவியானோ அப்ரூ, "இரண்டு மாதங் களுக்கு மேலாக மரியுபோல் இரும்பு ஆலையில் சிக்கி தவித்த மக்கள் சிறிது சிறிதாக மீட்கப்பட்ட பிறகு, அவர்களுக்கு உளவியல் சோதனை உள்ளிட்ட அனைத்து சேவைகளும் வழங்கப்படும்," என தெரிவித்தார். இதற்கிடையே ரஷ்யா மீது கடும் பொருளாதார தடைகளை விதித்து வரும் அமெரிக்கா உள்ளிட்ட பல மேற்கத்திய நாடுகள், உக்ரைனுக்கு ராணுவ ஆயுதங்கள், நிதி உதவிகளை செய்து வருகின்றன. சர்வதேச நாடுகள் தங்கள் ஆதரவை தெரிவிக்கும் விதமாக, அந்நாடுகளின் தலைவர்கள் உக்ரைனுக்கு நேரில் சென்று அதிபர் ஜெலன்ஸ்கியை சந்தித்து வருகின்றனர். நேற்று முன்தினம் உக்ரைன் தலைநகர் கீவ்வுக்கு சென்ற அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி, ரஷ்ய தாக்குதலில் சேதமடைந்த பகுதிகளை பார்வையிட்ட பின், அதிபர் ஜெலன்ஸ்கியை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின் போது, அமெரிக்க எம்.பிக்கள் சிலரும் உடனிருந்தனர். அப்போது சுதந்திரத்துக்கான உக்ரைன் போரில் அமெரிக்கா உறுதியாக துணை நிற்கும் என்று பெலோசி உறுதி அளித்தார்.

**ரஷ்ய ரோந்து படகு அழிப்பு:** உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், 'கருங்கடல் பகுதியில் பாம்பு தீவு அருகே ரஷ்யாவின் 2 ராப்டார் ரோந்து படகுகளை துருக்கியிடம் இருந்து வாங்கிய ராணுவ டிரோன்களின் உதவியுடன் உக்ரைன் ராணுவம் குண்டுவீசி அழித்தது," என கூறப்பட்டுள்ளது. எந்திர துப்பாக்கி, வேவு பார்க்கும் கருவிகள் பொருத்தப்பட்டட இந்த வகை படகுகளில் ஒரே நேரத்தில் 3 முதல் 20 வீரர்கள் வரை பயணிக்கலாம் என்பது இதன் சிறப்பு அம்சமாகும்.

**புதிய தடைக்கு ஆலோசனை:** ஐரோப்பிய கூட்டணி நாடுக ளின் எரிசக்தி துறை அமைச்சர்கள் நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தினர். இதில், ஐரோப்பிய கூட்டணி நாடுகளான பல்கேரியா, போலந்து ஆகிய நாடுகளுக்கு ரஷ்யா காஸ் விநியோகத்தை நிறுத்தியது குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும், ரஷ்யா மீது கூடுதல் பொருளாதார தடைகளை விதிப்பது பற்றியும் ஆலோ சனை நடந்தது. இந்த புதிய பொருளாதார தடைகள் இந்த வார இறுதியில் அறிவிக்கப்படலாம் என தெரிகிறது.

# இம்ரான்கான் மீது தொடர்ந்து வழக்குப் பதிவு

## கைதாக அதிக வாய்ப்பு?



பாகிஸ்தானில் பொறுப்பேற்றுள்ள புதிய அரசுக்கு தொடர்ந்து குடைச்சல் தருவதால், முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது அடுத்தடுத்து வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. இந்த வழக்குகளில் அவர் எந்த நேரத்திலும் கைதாவார் என அமைச்சர் கூறி உள்ளார்.

பாகிஸ்தான் பிரதமராக பொஸ் ஷெரீப் கடந்த மாதம் 11ஆம் திகதி பதவியேற்றார். பொஸ் ஷெரீப் தனது முதல்வெளிநாட்டு பயணமாக சவுதி அரேபியாவுக்கு சமீபத்தில் சென்று இருந்தார். பொஸ் தலைமையில் பாகிஸ்தான் குழுவினர் மெதினாவுக்கு சென்றனர். அப்போது இம்ரான்கானின் ஆதரவாளர்கள் பொஸ் ஷெரீப்பை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். ஷெரீப்பை 'திருடர்', 'துரோகி' என கூறி அவர்கள் கோஷம் எழுப்பினர். இந்த விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் பொலிஸார் இம்ரான்கான் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் உள்பட 150 பேர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்த சம்பவத்தில் இம்ரான்கானுக்கு தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்தால் அவர் கைது செய்யப்படுவார் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ராணா சனாவுல்லா தெரிவித்தார்.


இந்நிலையில், பாகிஸ்தான் தகவல் ஒளிபரப்பு துறை அமைச்சர் மரியம் அவுரங்கசீப் செய்தியாளர்களிடம் கூறுகையில், "இம்ரான் கான் பதவியில் இருந்தபோது, அரசாங்க காரை எடுத்து கொண்டார். ஆடம்பர பி.எம்.டபிள்யு. புல்லட் புரூப் காரின் மதிப்பு ரூ.6 கோடியே 15 லட்சம் ஆகும். வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் வரும் போது பாகிஸ்தான் பயன்படுத்த இந்த கார் வாங்கப்பட்டது. பிரதமர் அலுவலக கட்டுப்பாட்டில் இருந்த பி.எம்.டபிள்யு. காரை இம்ரான் கான் எடுத்து கொண்டார்" என்றார். பொஸ் அரசுக்கு தொடர்ந்து குடைச்சல் தருவதால் இம்ரான் மீது அடுத்தடுத்து வழக்குகள் பாய்கின்றன. அவர் எப்போது வேண்டுமானாலும் கைதாகலாம் எனஅரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

**நவாஸ் தண்டனை ரத்தா?**

பிரதமர்பொஸ்ஷெரீப்பின் அண்ணனான நவாஸ் ஷெரீப் ஏற்கனவே பாகிஸ்தான் பிரதமராக இருந்தவர். கடந்த 2018ம் ஆண்டு ஊழல் வழக்கில் 10 ஆண்டு சிறை தண்டனை பெற்ற நவாஸ் ஷெரீப் மருத்துவ சிகிச்சைக்காக லண்டன் சென்றவர் பின்னர் நாடு திரும்பவில்லை. இந்நிலையில், பாகிஸ்தானில் ஆட்சி மாற்றத்திற்கு பின் தற்போது நவாஸ் ஷெரீப்புக்கு விதிக்கப்பட்ட சிறை தண்டனையை ரத்து செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. இதுகுறித்து அமைச்சர் சனாவுல்லா கூறுகையில், "நவாஸ்க்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்ய பாகிஸ்தான் மற் றும் பஞ்சாப் மாகாண அரசுகளுக்கு அதிகாரம் உள்ளது. வேண்டுமென்றே தன் மீது ஊழல் வழக்கு போடப்பட்டுள் ளதாக கூறி நவாஸ் ஷெரீப் நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம்" என்றார்.

## ஊழல் வழக்கில் 7 ஆண்டுகள் சிறை

# ஷெரீப்பின் தண்டனையை ரத்து செய்ய பரிசீலனை



நவாஸ் ஷெரீப்பின் தண்டனையை ரத்து அல்லது இடைநீக்கம் செய்வது குறித்து பாஸ் ஷெரீப் தலைமையிலான அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

பாகிஸ்தானில் 3 முறை பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப், கடந்த 2017ஆம் ஆண்டு பனாமா கேட் ஊழல் வழக்கில் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதை தொடர்ந்து அங்கு ஆட்சி பொறுப்புக்கு வந்த இம்ரான்கான் அரசு நவாஸ் ஷெரீப் மீது பல்வேறு ஊழல் வழக்குகளை பதிவு செய்து விசாரித்தது. இதில் ஒரு வழக்கில் கடந்த 2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நவாஸ் ஷெரீப்புக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து பாகிஸ்தான் கோர்ட்டு தீர்ப்பு அளித்தது. அதை தொடர்ந்து அவர் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மருத்துவ சிகிச்சைக்காக 4 வாரம் ஜாமீன் பெற்று லண்டன் சென்றார். ஆனால் இன்று வரை பாகிஸ்தான் திரும்பவில்லை.

# விவாகரத்து செய்த மனைவியை மீண்டும் திருமணம் செய்ய பில் கேட்ஸ் விருப்பம்

மெலிண்டாவிடம் இருந்து முழுமையாக விலகி செல்லவில்லை என்றும் நட்போடு தான் இருக்கிறேன் எனவும் பில் கேட்ஸ் கூறியுள்ளார். மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைவரும், உலகின் நம்பர்1 பணக்காரருமான பில் கேட்ஸ் கடந்த 1994ஆம் ஆண்டு மெலிண்டா என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு 3 குழந்தைகள் பிறந்தன. இந்த நிலையில் கடந்த ஆண்டு மே மாதம் அவர்கள் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள் இருவரும் விவாகரத்து செய்து கொண்டு பிரிந்தனர்.

இந்த நிலையில் பில் கேட்ஸ் அமெரிக்காவில் இருந்து வெளியாகும் ஒரு பத்திரிகைக்கு பேட்டி அளித்துள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:-

27 ஆண்டுகள் திருமண வாழ்க்கைக்கு பிறகு நான் மெலிண்டாவை விட்டு தனியாக பிரிந்தேன். நான் அப்படி வாழ்க்கையில் மாற்றம் செய்து இருக்கக் கூடாது. நான் செய்ததை தவறாக நினைக்கிறேன்.

மெலிண்டாவை விட்டு பிரிந்தபிறகு நான் வேறு ஒரு திருமணம் செய்துகொள்ளவில்லை. அது உங்கள் அனைவருக்குமே தெரியும். மெலிண்டா மீது நான் இன்னும் பாசத்துடனே இருக்கிறேன். மெலிண்டாவை மீண்டும் திருமணம் செய்துகொள்ள நான் விரும்புகிறேன். இது தொடர்பாக பேச்சு நடத்தி கொண்டிருக் கிறேன். எதிர்காலத்தை பொறுத்தவரை எனக்கு என்று எந்த திட்டமும் கிடையாது. ஆனால் மீண்டும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற விருப்பம் மட்டும் உள்ளது. மெலிண்டாவிடம் இருந்து நான் முழுமையாக விலகி செல்லவில்லை. நட்போடு தான் இருக்கிறேன். எங்கள் நிறுவனத்தின் நலத்திட்ட அமைப்பு தொடர்பான ஆண்டு கூட்டத்தில் மெலிண்டாவை நான் சந்தித்தேன். அப்போது நாங்கள் இருவரும் ஒன்றாக உணவருந்தினோம். ஒன்றாக சேர்ந்து வாழ வாய்ப்பு கிடைத்தால் மகிழ்ச்சி அடைவோம்.

# தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் நிலக்கரி தட்டுப்பாடு; மின் உற்பத்தி பாதிப்பு



தூத்துக்குடியில்பழைமையான5யூனிட்டுகளை கொண்டு இயங்கக்கூடிய அனல் மின் நிலையம் உள்ளது. இதில் அவ்வப்போது பழுது காரணமாக மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு வந்தது. தற்போது அதிகப்படியான நிலக்கரி தட்டுப்பாடு காரணமாக ஒவ்வொரு அலகுகளாக நிறுத்தப்பட்டு வருகிறது. சமீப நாள்களாக நாடு முழுவதும் நிலக்கரி தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதன் காரணமாக தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இன்று 3 யூனிட்டுகளில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் ஒவ்வொரு அலகுகளில் 210 மெகாவாட் வீதம் 1,050 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்பட்டுவருகிறது. இதில் இன்று 3 அலகுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் 630 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. 2 அலகுகளில் 420 மெகாவாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய் யப்பட்டுவருகிறது.

தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் எப்போதும் 2 லட்சம் தொன் நிலக்கரி இருப்பு வைக்கப்பட்டிருக்கும். தற்போது நிலக்கரி தட்டுப்பாடு காரணமாக, இருப்பு வைக்க முடியாத சூழல் உள்ளது. இதன் காரணமாக அனல் மின் நிலை யத்தின் 3 அலகுகளில் மின் உற்பத்தி நிறுத்தப் பட்டுள்ளது. இன்றைய நிலையில் 30,000 தொன் நிலக்கரி மட்டுமே இருப்பு உள்ளதால் 2 அலகுகள் மட்டுமே இயங்கிவருகிறனது.

ஒரு நாளுக்கு, 17 ஆயிரம் முதல் 18 ஆயிரம் தொன் வரை நிலக்கரி தேவைப்படுவதால் 30 ஆயிரம் தொன் என்பது 2 நாள்களுக்கு மட்டுமே போதுமானதாகஉள்ளது. இந்தஅனல்மின்நிலையத்தில் 3 அலகுகளில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதால், தமிழகத்திற்கு கிடைக்க கூடிய 15 முதல் 16 சதவிகித மின்சாரம் குறைந்துள்ளது.

## ஆம் ஆத்மியின் 3 எம்.பிக்கள் பதவியேற்பு



ஆம்ஆத்மியைசேர்ந்த3பேர்மாநிலங்களவைஎம்.பிக்களாகநேற்றுபதவியேற்றுக்கொண்டனர். பஞ்சாப் மாநிலத்தில் காலியாக இருந்த 3 மாநிலங்களவை எம்.பி. பதவிக்கு கடந்த மார்ச்சில் தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் வேறு எந்த அரசியல் கட்சி சார்பிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்படவில்லை. இதனை தொடர்ந்து ஆம் ஆத்மி சார்பில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட ராகவ் சத்தா, அசோக் மிட்டால் மற்றும் சஞ்சீவ் அரோரா ஆகியோர் போட்டியின்றி மாநிலங்களவை எம்.பிக்களாக தேர்வு செய்யப்பட்டனர். மூன்று பேரும் நேற்று எம்.பிக்களாக பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு மாநிலங்களவை தலைவர் வெங்கய்ய நாயுடு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

## மறைந்த நடிகர் விவேக் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள சாலைக்கு ‘சின்னக் கலைவாணர் விவேக் சாலை’ என பெயர் மாற்றம்



நடிகர் விவேக் மறைந்து ஒரு வருடம் நிறைவடைந்திருக்க கூடிய நிலையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்திருக்க கூடிய அவரது சாலைக்கு அவரது பெயர் சூட்டி அரசாணை வெளியிடப்பட்டது. இன்றைய தினம் அந்த சாலையில் பெயர்ப்பலகை தற்போது திறந்து வைக்கப்படும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சின்ன கலைவாணர் விவேக் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் உடல்நல குறைவு காரணமாக உயிரிழந்தார். அவருடைய மறைவு பல்வேறு தரப்பு மக்களை சோகத்தில் ஆழ்த்தியது. இந்நிலையில் கடந்த வாரம் விவேக்கின் மனைவி அருள்செல்வி தமிழக முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து அவர் வாழ்ந்த வீடு அமைந்திருக்கும் சாலைக்கு அவரது பெயரை சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை மனுவை அளித்தார்.

இந்த நிலையில் அவரது குடும்பத்தினர் மற்றும் திரையுலகினரின் கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் பத்மாவதி நகர் பிரதான சாலையை ‘சின்னக் கலைவாணர் விவேக் சாலை’ என வைக்குமாறு பரிந்துரை செய்தார். இதனை தொடர்ந்து சென்னை மாநகராட்சி தரப்பில் அந்த சாலையின் பெயர்மாற்றம் செய்யப்பட்டு பெயர்பலகையும் வைக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த பெயர்ப்பலகை திறந்துவைக்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மக்கள்நலவாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று பெயர்பலகையை திறந்து வைத்தார். சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் பூச்சிமுருகன் மற்றும் திரையுலகபிரபலங்கள் இந்தநிகழ்ச்சியில்பங்கேற்றனர். மறைந்த விவேக் அவர்களை நினைவுகூரும் விதமாக நிகழ்ச்சியில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. திரையுலகில் 25 ஆண்டுகளுக்கு மேலாக நகைச்சுவை நடிகராக வலம் வந்த நடிகர் விவேக் கலைமாமணி விருது, பத்ம ஸ்ரீ விருது ஆகிய விருதுகளை பெற்றுள்ளார்.

## இரவு நேரங்களில் கைதிகளிடம் விசாரணை நடத்தக் கூடாது

### டி.ஜி.பி. உத்தரவு



தமிழகம் மட்டுமல்லாது சென்னையில் கைது செய்யப்படும் குற்றவாளிகளை இரவு நேரங்களில் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தக் கூடாது என டி.ஜி.பி. ஒரு சுற்றறிக்கை அனுப்பி உள்ளார்.

சென்னை தலைமைச் செயலக காலனி பொலிஸ் நிலையத்தில் விக்னேஷ் என்பவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது உயிரிழந்தார். இது தொடர்பாக மூன்று காவல் துறையை சேர்ந்தவர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

தொடர்ந்து இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழகம் மட்டுமல்லாது சென்னையில் கைது செய்யப்படும் குற்றவாளிகளை இரவு நேரங்களில் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தக் கூடாது என டி.ஜி.பி. ஒரு சுற்றறிக்கை அனுப்பி உள்ளார்.

அதனுடைய அடிப்படையில் அந்தந்த மாவட்ட பொலிஸ் துறை ஆணையர்கள் மற்றும் கண் காணிப்பாளர்கள் காவல் நிலை யங்களில் கைதிகளை இரவில் வைத்து விசாரணை நடத்த கூடாது என்றும், கைது செய்யப்பட்ட உடன்உடனடியாக வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி முறையாக சிறையிலடைக்க வேண்டும் என்று அந்த சுற்றறிக்கையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## பொதுத்தேர்வின்போது தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டும்

### மின்வாரியம் உத்தரவு

பொதுத்தேர்வின்போது தேர்வு மையங்களில் மின்தடை ஏற்படாதவகையில்நடவடிக்கை எடுக்க மின்சார வாரியம் வலியுறுத்தி உள்ளது.

தமிழகத்தில் வரும் மே 5ஆம் திகதி ப்ளஸ் 2 வகுப்புக்கும், மே 6ஆம் திகதி முதல் 10ஆம் வகுப்புக்கும், மே 10 ஆம் திகதிமுதல் ப்ளஸ் 1 வகுப்புக்கும் பொதுத் தேர்வு நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தேர்வின் போது தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டும் என்று மின்சார வாரியம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. நாளை மறுநாள் முதல் பொதுத்தேர்வு தொடங்க உள்ள நிலையில் மண்டல தலைமை பொறியாளர்களுக்கு மின்வாரியம் உத்தரவிட்டுள்ளது.

சுற்றறிக்கையில், தேர்வு மையங்களில் மின்தடை ஏற்படாதவகையில்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மின்தடை ஏற்பட்டால் மாற்று வசதி ஏற்படுத்தவும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் மின்சார வாரியம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், பொதுத்தேர்வு மையங்களில் மின்வாரிய அதிகாரிகள் முன்கூட்டியே மின்பாதைகள் பற்றி ஆய்வு செய்ய வேண்டும் என்றும் பொதுத்தேர்வு மையங்களுக்கு அருகேயுள்ள மின்மாற்றி பழுதடைந்தால் உடனே மாற்றவும் மின்வாரியம் உத்தரவிட்டுள்ளது.



காலைக்கதிர் மாலைப்பதிப்பு


# அரசுக்குச் சார்பாக இருந்து கொண்டு நமது பொருளாதாரத்தை வளர்ப்போம்

## அமைச்சர் சந்திரகாந்தன் தெரிவிப்பு





(கல்லடி நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாம் அரசுக்குச் சார்பாக இருந்து கொண்டு, எமது கடமைகளை நிறைவேற்றி, தனிநபர் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– இப்படி கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் பேத்தாழைப் பிரதேசத்திற்கு முதல் தடவையாக விஜயம் செய்து கல்குடா தொகுதியிலுள்ள கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக அப்பிரதேச மக்களுடனான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடல் கோறளைப் பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர் திருமதி சோபா ரஞ்சித் தலைமையில் பேத்தாழை குகநேசன் கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:–

ஆசியாவிலேயே சனத்தொகை குறைந்ததும், அரசாங்க அதிகாரிகள் அதிகம் கொண்ட நாடாகவும் இலங்கை காணப்படுகின்றது. இந்நிலையில் நாடு தருகின்ற நல்ல விடயங்களை அனுபவிக்கும் அதேவேளை தீய விடயங்களையும் நாம் அனுபவித்தேயாக வேண்டும். உலக நாடுகள் பலவற்றிலும் பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்ட போதிலும் அது எம்மை அதிகளவில் தாக்கியுள்ளது.

இவ்வாறான காலகட்டத்தில் எமது பிரதேசத்திலுள்ள கிராமிய வீதிகள் பலவற்றை எமக்குக் கிடைக்கும் நிதியின் அளவைப் பொறுத்து அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளோம்–என்றார்.

இக்கலந்துரையாடலில் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் உட்பட பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மட்டு. மேற்குக் கல்வி வலயத்தின் நூறு ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் நூறு ஆசிரியர்கள் வேறு வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்கு அமைய, கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதனை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய நிர்வாகத்தினர் உரிய ஆசிரியர்களிடம் கையளித்து வருகின்றனர்.

குறித்த வலயத்தில் கடமையாற்றி வேறுவலயங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்செல்வதற்காக விண்ணப்பித்தவர்களுக்கே, எதிர்வரும் 18.05.2022 முதல் செயற்படும் வண்ணம் இவ்விடமாற்றக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இடமாற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு இணையாக இவ்வலயத்திற்கு, வேறு வலயங்களில் இருந்து அல்லது புதிய நியமனங்கள் மூலமாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நியமிக்கப்படாவிட்டால், மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள மாணவர்களின் கல்வி மிகவும் பாதிப்படையும். எனவே, போதுமான ஆசிரியர் வளம் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் மட்டக்களப்பு மேற்கு கல்வி அமைப்புக்கள் விடுத்துள்ளன.








# மட்டு. ஆனந்தகிரி அறப்பணி சபையால் கோராவெளியில் மரக்கன்றுகள் நடுகை

(கு.கிருபாகரன்)

மட்டக்களப்பு ஆனந்தகிரி அறப்பணி சபையின் ஏற்பாட்டில் 'ஆளுக்கொரு மரம் நடுவோம், இயற்கையை நேசிப்போம்' எனும் தொனிப் பொருளுக்கமைய கோறளைப்பற்று– தெற்கு பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள கோராவெளி கண்ணகையம்மன் ஆலய வளாகத்தில் 1,500 கற்பக விருட்ச வேம்பு மரக்கன்றுகளை நடுகை செய்யும் நிகழ்வு கடந்த சனியன்று கோறளைப்பற்று பிரதேச செயலாளர் சு.ராஜ்பாபு தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆனந்தகிரி அறக்கட்டளைத் தலைவர் லோ.தீபாகரன், செயலாளர் நே.பிருந்தாபன் மற்றும் கலாசார உத்தியோகத்தரும், மேற்படி அறக்கட்டளையின் ஏறாவூர்ப்பற்றுப் பிராந்திய இணைப்பாளருமான கே.எஸ்.ஆர்.சிவகுமார் உட்பட பலர் கலந்து கொண்டு, பயன்தரு மரக்கன்றுகளை நட்டனர்.

# ஒலுவில் கைதான 2 சிறுவர்கள் சிறுவர் நன்னடத்தை பள்ளிக்கு

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு சிறுவர்களை, சிறுவர் நன்னடத்தை சீர்திருத்த பாடசாலையில் சேர்ப்பித்துள்ளார்கள் என அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பெரும் குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி எம்.எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

அண்மைக் காலமாக ஒலுவில் பிரதேசத்தில் வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் மற்றும் தோட்டங்களிலிருந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஆகியன திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர்களால் செய்யப்பட்டிருந்த முறைப்பாட்டையடுத்து, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் டபிள்யூ. எம்.எஸ்.பி. விஜயதுங்கவின் ஆலோசனைக்கமைய, விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்தன.

இந்நிலையில் சந்தேக நபர்களான மேற்படி இரு சிறுவர்கள், நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இச்சிறுவர்கள், அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் ஊடாக சீர்திருத்த பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அத்துடன், கைப்பற்றப்பட்டுள்ள சைக்கிள்களை, அதன் உரிமையாளர்கள் அடையாளத்தை காண்பித்து, நீதிமன்றினூடாக பெற்றுக் கொள்ளலாமென அறிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சிறுவர்கள், போதைக்கு அடிமையானவர்களென விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

# மானிட சுபீட்சத்துக்கு வழி வகுக்கின்ற நாளாக ரமழான் பெருநாள் அமையட்டும்

## வாழ்த்துச் செய்தியில் சஜித் தெரிவிப்பு



உலகெங்கிலும் உள்ள இஸ்லாமியர்கள் ஒரு மாதகாலம் நோன்பை நோற்று பிறை கண்டதும் கொண்டாடும் பெருநாள் ரமழான் பெருநாள் அல்லது ஈதுல் பித்ர் இன்று கொண்டாடப்படுகிறது.

இறைவன் புனித குர்ஆனை இறைதூதர் முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது ரமழான் மாதத்திலாகும் என்பதுடன் சமத்துவத்தின் மகத்தான செய்தியும் இந்த ரமழான் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

– இவ்வாறு ரமழான் வாழ்த்துச்செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

ரமழான் மாதத்தில், முஸ்லிம்கள் இறைவனை சிரம்பணிந்து மிகுந்த பக்தியுடன் வணக்கத்தில் ஈடுபடுவர்.

ரமழான் நோன்பு காலத்தில் பசித்திருப்பவர்களின் பசியைப் புரிந்து கொள்ளவும், அது பற்றி உணர்வுபூர்வமாக அறிந்து கொண்டு வாழ்வதற்கும், மனதைக் கட்டுப்படுத்தும் திறனை வளர்த்துக் கொள்வதற்குமான ஒரு சிறந்த வாய்ப்பு இந்த ரமழான் நோன்பாகும்.

இந்த சிறந்த வாழ்க்கை முறைகளை ஒரு மாதம் மட்டும் அல்லாமல் அன்றாட வாழ்விலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது அவர்களின் நோக்கமாகும்.

அவர்களின் அர்ப்பணிப்பு, சுய கட்டுப்பாடு மற்றும் சமத்துவத்துக்கு வழிவகுக்கும் சுய தியாகம் ஆகியவை தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சமயக் கல்வியறிவு பெற்ற முஸ்லிம்கள் இலங்கைச் சமூகத்தில் ஏனைய இனங்கள் மற்றும் மதங்களுடன் வரலாற்று ரீதியாக புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பரஸ்பர நட்பு, மனித நேயம், அன்பு ஆகியவற்றால் அவர்கள் நீண்டகாலமாகப் பேணி வரும் நல்வாழ்வின் செய்தி உன்னதமானது. அனைத்து முஸ்லிம்களுக்கும், பரஸ்பர அன்பும், எல்லையில்லா சகோதரத்துவமும், நட்பு ரீதியான அடிப்படையில் உன்னதமான தாய்நாட்டைக் கட்டியெழுப்பும் உறுதியும் கொண்ட நாளாக இந்த ரமழான் பெருநாள் அமையட்டும்! – என்றுள்ளது.

# அனைத்து ஆன்மீக திருப்தியும் சகலருக்கும் கிடைக்கவேண்டும்

## வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு



ஒரு மாதகால நோன்பை முடித்துக் கொண்டு இஸ்லாமிய மக்கள் அவர்களின் நம்பிக்கைபடி ஈதுல் பித்ர் எனும் நோன்பு பெருநாள் தினத்தில் இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறார்கள்.

நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்துஆன்மீகதிருப்தியும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ரமழான் வாழ்த்து செய்தி தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய மக்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு சகல வழிபாடுகளிலும் நோன்பு பெருநாள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொரு நாளும் அல்லாஹ்வின் போதனைகளின்படி நற்செயல்களை புரிய இது ஒரு மன தூண்டுதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இணக்கமான ஒன்று கூடல்கள், கூட்டு சமரசம், தியாகம், நிலையிலிருந்து மீள்வது, நன்மைகளைக் கடைப்பிடிப்பது போன்று அவரவர்களிடையில் நிலவுகின்ற கலாசார உறவுகளே சமூக முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்.

அனைத்துஇறையியலாளர்களின் தத்துவமும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

பெருநாள் கொண்டாட்டம் உட்பட இஸ்லாமிய தத்துவத்தின் அந்த மார்க்கத்தின் நம்பிக்கைகளை நாம் நீண்ட காலமாக கண்டு வருகிறோம். அது சொல்லும் மேல்நிலை, சமூக நல்வாழ்வுக்கு பிரயோகிப்பதன் மூலம் பரஸ்பர புரிதலுக்குக் காரணமாக அமைகிறது. இந்த நோன்பு பெருநாள் பண்டிகைக்குப் பின்னர் வரும் காலம் இலங்கை முஸ்லிம் உட்பட உலகெங்கிலும் உள்ள சகல முஸ்லிம்களுக்கும் மகிழ்ச்சியான மற்றும் வளமான காலமாக அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

# கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்களை முட்டாள்கள் என அசிங்கப்படுத்தும் வீரவன்ஸ



காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்களை அசிங்கப்படுத்தும் வகையில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ கருத்து வெளியிட்டுள்ளார்.

அதன்படி, தற்போதைய நிலையில் யாரும் பிரபலம் அடைய விரும்பினால் கோட்டா கோ கம சென்றால் சாத்தியமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மே தின கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இன்று வீதியில் இருப்பவர்களில் அதிகமானோர் மத்திய வர்க்கத்தினர் தான். இன்று அவர்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல், சவால் ஏற்பட்டுள்ளது.

நெருக்கடிக்கு மத்தியில் ஆர்ப்பாட்டங்களில் வீரனாகுவது பெரிய விடயமல்ல. எந்த ஒரு கோமாளியும் காலி முகத்திடலுக்கு சென்றால் ஹீரோவாகுவது பெரிய விடயமல்ல.

நான் அண்மையில் பார்த்தேன் பொலிஸ் அதிகாரி ஒருவர் தேசிய கொடியுடன் பொலிஸ் சீருடையில்சென்றுவீரக்கதைகள்பேசிக்கொண்டிருந்தார். அவர் யார் என தேடி பார்த்தால் 5 கிலோகிராம் கஞ்சாவுடன் சிக்கிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஒருவர். ஒழுக்காற்று விசாரணைகளுக்குள்ளானவர். அவர் அங்கு சென்றதால் வீரனாகி விட்டார்.

இன்னும் சிலரும் உள்ளனர். பெயர்களை குறிப்பிட்டால் மனமுடைய வாய்ப்புகள் உள்ளன. எந்த ஒரு அயோக்கியனும் காலி முகத்திடலுக்கு சென்றால் அவர் வீரன். இவ்வாறு நெருக்கடியில் வீரனாகுவது வீரன் அல்ல அந்த நெருக்கடியை தீர்ப்பதே வீரருடைய செயல் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆசீர்வாதம் நிறைந்த நோன்பு பெருநாள் நல்வாழ்த்துக்கள்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



உலகம் முழுவதும் பரந்து வாழும் இஸ்லாமியர்களுடன் இணைந்து ஈத்–உல்–பித்ர் பெருநாளைக் கொண்டாடும் இலங்கையிலுள்ள அனைத்து இஸ்லாமிய சமூகத்தினருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது ரமழான் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இஸ்லாம் நாட்காட்டியின் மிக முக்கியமான மாதத்தில், உங்கள் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்காக உலக வாழ்க்கையிலிருந்து சற்று ஒதுங்கி ஆன்மீக சடங்கு முறைகளை நிறைவேற்றுவது ஒரு சிறந்த பணியாகும்.

அதற்காக இந்த ரமழான் நோன்பு காலத்தில் நீங்கள் அனைவரும் நற்செயல்களில் மாத்திரம் கவனம் செலுத்துவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

பட்டினியால் வாடும் ஒருவரின் வலியைப் புரிந்துகொள்வதும், தியாக வாழ்வின் மதிப்பை உணர்வதும் இந்த நோன்பு காலத்தில் நீங்கள் பெறும் விலைமதிப்பற்ற வாழ்க்கை மதிப்புகளாகும்.

அல் குர்ஆனின் கூற்றுக்கு அமைய ரமழான் நோன்புடன் தொடர்புடைய உன்னத நற்பண்புகளை பின்பற்றி அந்த நோன்பு காலத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த உங்களுக்கு அதன் ஆன்மீக சாரத்தை சமூகமயமாக்குவதற்கான சந்தர்ப்பம்தற்போது உதயமாகி யுள்ளது என்பது எனது நம்பிக்கை.

முழு நாடும் சவால்மிக்கதோர் காலகட்டத்திலுள்ள இத்தருணத்தில் சமூகத்தில் உள்ள பிறர் குறித்த உணர்வுடன் தியாக மனப்பாங்குடன் செயற்படுமாறு நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் ஆசீர்வாதம் நிறைந்த இனிய ஈத்–உல்–பித்ர் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். – என்றுள்ளது.

# மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு அரசமைப்பு திருத்தம் மூலம் தீர்வு கிடைக்காது

## வஜிர அபேவர்த்தன சுட்டிக்காட்டு

நாட்டு மக்கள் தற்போது அரசமைப்பு மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. மாறாக எதிர்கொண்டுள்ள எரிபொருள், காஸ் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருள்களைப் பெற்றுக்கொண்டு சாதாரண வாழ்க்கையை கொண்டுசெல்வதற்கு முடியுமான நிலைமையையே எதிர்பார்க்கின்றனர்.

அதனால் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கே முன்னுரிமை வழங்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வுகாண வேண்டியதன் தேவை தொடர்பாகக் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் –

நாட்டு மக்களுக்கு தற்போது தேவையாக இருப்பது அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை இல்லாமலாக்கி 21ஆம் திருத்தத்தைக் கொண்டுவருவது அல்ல. மாறாக மக்கள் முகம்கொடுத்திருக்கும் எரிபொருள், பஸ், மின்சாரம், மருந்து உட்பட அத்தியாவசியப் பொருள்களை மீண்டும் பெற்றுக் கொண்டு சாதாரண வாழ்க்கையை ஆரம்பிப்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும்.

அரசாங்கம் எடுத்த பிழையான தீர்மானம் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் உண்மையான பிரச்சினையை உணர்ந்து கொண்டு, அவற்றுக்கு விரைவாகத் தீர்வு பெற்றுக் கொடுக்கவேண்டும். அவ்வாறு செயற்படாவிட்டால் நாடு பாரிய அழிவுக்குத் தள்ளப்படும் நிலை இருக்கின்றது. அதனால் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு விரைவாக நாட்டுக்குப் பொருளாதாரத் தீர்வு தேவையாகின்றது. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான தீர்வை நாடாளுமன்றத்துக்கு ஏற்கனவே சமர்ப்பித்திருக்கின்றார். அதனால் இதுதொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.05.2022இல் வெளியிடப்பெற்றது.